## களம் காணுங்கள்! கழகத்தின் வெற்றிக்காகக் களமாடுங்கள்!

# நாற்பதையும் வென்று, நாட்டைக் காப்போம்!

### டெல்டா மாவட்டக் கழகங்களின் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**திருச்சி, ஜூலை, 28 -**

**“களம் காணுங்கள்! கழகத்தின் வெற்றிக்காகக் களமாடுங்கள்! நாற்பதையும் வென்று, நாட்டைக் காப்போம்!” என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சியில் நேற்று முன் நடைபெற்ற டெல்டா மாவட்டக் கழகங்களின் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்தில் உரையாற்றும் போது உறுதிபடக் கூறினார்.**

**திருச்சியில் நேற்று முன்தினம் (26-7-2023) மாலை, நடைபெற்ற, டெல்டா மாவட்டக் கழகங்களின் வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: -**

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் திருச்சிக்கும் மிக நெருக்கமான தொடர்பு உண்டு. திருச்சியில் நடந்த மாநில மாநாட்டில் தான் நாம் 1957ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிடலாம் என முடிவெடுத்தோம்.

திருச்சியை ‘திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாடி வீடு’ என்று பேரறிஞர் அண்ணாவும், ‘கழகத்தின் கோட்டை’ என்று நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களும் சொல்வார்கள். கழகத்தின் கோட்டை மட்டுமல்ல, கழகத்தின் தீரர்கள் கோட்டம்தான் இந்த திருச்சி.

**திருச்சியில் கலைஞர் உருவாக்கிய ஐம்பெரும் முழக்கங்கள்!**

1971ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில்தான் தலைவர் கலைஞர் அவர்கள் நம்முடைய கொள்கை முழக்கங்களான,

- அண்ணா வழியில் அயராது உழைப்போம்,
- ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்,
- வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்,
- இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்,
- மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி’

என்ற ‘ஐம்பெரும் முழக்கங்களை’ நமக்கு உருவாக்கித் தந்தார்கள்.

முக்கியமான மாநாடுகளை திருச்சியில்தான் தலைவர் கலைஞர் அவர்கள் தேர்ந்தெடுத்து நடத்துவார்கள். அவ்வாறு நடத்தப்படும் மாநாடுகள் எல்லாம் திருப்புமுனை மாநாடுகளாக அமையும். ஏன், கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு திருச்சியில் மாநாடுபோல் நடைபெற்ற பொதுக்கூட்டம்தான் தமிழ்நாட்டின் ஆட்சி மாற்றத்துக்கு அடித்தளம் அமைத்த சிறப்பான பொதுக்கூட்டமாக அமைந்திருந்தது.

தமிழ்நாட்டை மட்டுமல்ல, இந்தியாவின் கவனத்தையே ஈர்த்த அந்த மாநாட்டை முன்னின்று நடத்திக் காட்டியவர்தான் நம்முடைய முதன்மைச் செயலாளர் நேரு அவர்கள். அவரைப் பாராட்டுவது என்பது, என்னை நானே பாராட்டிக் கொள்வது என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு.

‘நேரு என்றால் மாநாடு; மாநாடு என்றால் நேரு’ என்று பெயர் பெற்றவர் அவர். ‘நேருக்கு நிகர் நேருதான!’ என்றும் நான் அடிக்கடி சொல்லி இருக்கிறேன். அத்தகைய பாராட்டுக்கு முழுத் தகுதி படைத்தவர்தான் நம்முடைய முதன்மைச் செயலாளர் நேரு அவர்கள்.

மிகக் குறுகிய காலத்தில், பத்து நாட்களுக்குள்ளாக இந்த வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்தை நடத்திட வேண்டும் என்று நாங்கள் எடுத்துச் சொன்ன நேரத்தில், அதை ஏற்றுக்கொண்டு, மிகச் சிறப்பாகவும் பிரமாண்டமாகவும் நடத்திக் காட்டி இருக்கிறார். அதற்காக அவருக்கு மட்டுமல்ல, அவரோடு இணைந்து பணியாற்றிய திருச்சி ஒன்றுபட்ட மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி!

டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்திருக்கும் மாவட்டக் கழகச் செயலாளர்களான அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அமைச்சர் எஸ்.ரகுபதி அமைச்சர் சிவசங்கர் அமைச்சர் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அமைச்சர் கணேசன்- அதேபோல், துரை சந்திரசேகரன் சு.கல்யாண சுந்தரம் பூண்டி கலைவாணன் குன்னம் ராஜேந்திரன், காடுவெட்டி தியாகராஜன், வைரமணி, நிவேதா முருகன், கௌதமன், அண்ணாதுரை, செல்லப்பாண்டியன் ஆகியோர் தங்களது மாவட்டக் கழகங்களுக்கு உட்பட்டிருக்கும் வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களை இங்கு அழைத்து வந்திருக்கிறார்கள்.

15 கழக மாவட்டங்களில் உள்ள 12,645 வாக்குச்சாவடிகளில் இருந்தும் தலா ஒவ்வொரு பொறுப்பாளர்கள் இங்கே வந்திருக்கிறீர்கள். உங்கள் அனைவர்க்கும் என்னுடைய வாழ்த்துகள்! பாராட்டுகள்!

**15 கழக மாவட்டங்களிலிருந்து 12,645 வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள்!**

கடந்த சில மாதங்களாக தலைமைக் கழகத்தில் இருந்து உங்களையெல்லாம் அழைத்துப் பேசி, உங்களைப் பற்றிய முழுமையான விவரங்களைப் பெறச் சொல்லியிருந்தேன். பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சிலரை மாற்றவும் சொல்லியிருந்தேன். மாற்றப்பட்டவர்களுக்குப் பதிலாக புதியவர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களைப் பற்றியும் விவரங்கள் சேகரிக்கப் பட்டன.

இப்படி பல கட்ட ஆய்வுகளுக்குப் பிறகே ‘வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்’ என்ற அடையாள அட்டை உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த அட்டையைப் பெற்ற டெல்டா மாவட்டங்களின் பொறுப்பாளர்கள் மட்டும் இங்கே முதல் கட்டமாக அழைக்கப்பட்டு இருக்கிறீர்கள். உங்களுக்கான வகுப்புகள் காலை முதலே இங்கு நடந்திருக்கிறது.




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.7.2023) திருச்சிராப்பள்ளி, ராம்ஜி நகரில் நடைபெற்ற டெல்டா மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர்கள் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் பெருமக்கள், கழக மாவட்டச் செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் மண்டல வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களின் கடமைகளும் பணிகளும் என்ற தலைப்பில், நம்முடைய மாநில வழக்கறிஞர் அணிச் செயலாளர் – மூத்த வழக்கறிஞர் என். ஆர். இளங்கோ அவர்களும், வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணிகள் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து, மாநிலங்களவை உறுப்பினர் கழக அயலக அணிச் செயலாளர் நண்பர் அப்துல்லா அவர்களும், சமூக வலைத்தளங்களின் பயன்பாடும், செயல்படுத்த வேண்டிய முறையும் என்பது குறித்து, நம்முடைய கழக மாணவரணித் தலைவர் வழக்கறிஞர் ராஜீவ்காந்தி அவர்களும் உங்களுக்கு தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

நமது திராவிட மாடல் அரசின் மக்கள் நலன் காக்கும் சமூக நலத் திட்டங்கள் குறித்து, நம்முடைய கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா, அமைச்சர்கள் எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி , டி.ஆர்.பி. ராஜா ஆகியோரும் இங்கு உரையாற்றி இருக்கிறார்கள்.

> **இன்று முதல், கழகத்தின் தேர்தல் பொறுப்பாளர்கள் என்ற கம்பீரத்தோடு நீங்கள் கடமையாற்ற வேண்டும். தலைவர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து சொல்லி வந்ததுபோல், வெற்றி ஒன்றே உங்களுடைய இலக்காக அமைய வேண்டும். வெற்றியை அடைவதற்கான வழி முறைகளில் மிகச் சரியாக நீங்கள் நடைபோட வேண்டும்.**

கழகத்தின் வரலாறு அடிப்படைக் கொள்கைகள் திராவிட இயக்கத்தின் கோட்பாடுகள் நவீன தமிழ்நாட்டை உருவாக்க நாம் எடுத்த முயற்சிகள் திராவிட மாடல் ஆட்சி ஆகியவை குறித்த அடிப்படைத் தகவல்களை நீங்கள் எல்லாம் அறிந்திருப்பீர்கள். அதேபோல், தேர்தல் பணிகள் குறித்த விதிமுறைகளையும் அனைவரும் அறிந்திருப்பீர்கள். இவை அனைத்தையும் மனதில் வைத்து நீங்கள் செயல்பட வேண்டும்.

வருகிற செப்டம்பர் மாதம் 17ஆம் தேதி, கழகம் தொடங்கப்பட்டு 75ஆவது ஆண்டில் நாம் அடியெடுத்து வைக்க இருக்கிறோம். தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை இப்போது நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். புதியதாக ஒரு கோடி உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்று தலைமைக் கழகத்தின் சார்பில் உத்தரவிட்டு அந்தப் பணிகள் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. இந்த நிலையில்தான் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கி நாம் காத்திருக்கிறோம். இத்தகைய பெருமை வாய்ந்த இந்த ஆண்டில்தான் நீங்கள் வாக்குச்சாவடியின் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள்.

கழகத்தின் வாக்குச்சாவடிப் பொறுப்பாளர் என்ற நிலையை அடைந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் மீண்டும் மீண்டும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்!

கழகம் ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், மக்கள் பணி என்பதையே அடிப்படையாக மனதில் ஏற்று நாம் நம்முடைய கடமையை ஆற்றி வருகிறோம்.

**மக்கள் பணி ஆற்றுவதையே கடமையாகக் கொண்டுள்ளோம்!**

கொரோனாவின் முதல் அலையின் போது நாம் ஆட்சியில் இல்லை. அந்த நேரத்தில் நம் கழக உடன்பிறப்புகள் சிலரை கொரோனாவுக்கு இழந்தபோதும்கூட, ஒவ்வொரு பகுதியிலும் நம் கழகமே முழுவீச்சில் இறங்கி நிவாரணப் பணிகளைச் செய்தது என்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். வாக்குச்சாவடியின் பொறுப்பாளர்களாகிய நீங்கள்தான் அந்தக் கடமையைச் செய்திருக்கிறீர்கள்.

வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்களாகிய நீங்கள்தான் உங்கள் வாக்குச்சாவடியில் உள்ள வாக்காளர்களுக்கு முழு பொறுப்பாளர்.

வாக்குச் சாவடிப் பொறுப்பாளர் என்றால் நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலின் வெற்றிக்கும் நீங்கள்தான் பொறுப்பாளர்! இதனை யாரும் மறந்து விட வேண்டாம்!

‘நாற்பதும் நமதே! நாடும் நமதே!’ என்று நான் முழங்கி இருக்கிறேன் என்றால் உங்கள் மீது நம்பிக்கை வைத்துத்தான் முழங்கி இருக்கிறேனே தவிர, வேறு அல்ல.

இன்று முதல், கழகத்தின் தேர்தல் பொறுப்பாளர்கள் என்ற கம்பீரத்தோடு நீங்கள் கடமையாற்ற வேண்டும். தலைவர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து சொல்லி வந்ததுபோல், வெற்றி ஒன்றே உங்களுடைய இலக்காக அமைய வேண்டும். வெற்றியை அடைவதற்கான வழிமுறைகளில் மிகச் சரியாக நீங்கள் நடைபோட வேண்டும்.

பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் உங்களுக்கு நிறைய கடமைகளும் இருக்கிறது. அதில் குறிப்பாக, வாக்காளர் பட்டியலைச் சரிபார்ப்பது தான் உங்களது முதல் பணி! வாக்காளர் பட்டியலில் உங்கள் வாக்குச்சாவடிக்குரிய வாக்காளர்களின் விவரங்கள் சரியாக இருக்கின்றனவா, ஏதேனும் போலி வாக்காளர்கள் இடம்பெற்றிருக்கின்றனரா, இறந்தவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டிருக்கிறதா ஆகியவற்றை முழுமையாகச் சரிபார்க்கும் கடமை உங்களுடையது.

வாக்காளரை நம்மை நோக்கி ஈர்ப்பது அடுத்த பணி! உங்களது வாக்குச் சாவடிக்கு நியமிக்கப்பட்டிருக்கும் வாக்குச் சாவடி உறுப்பினர்களை ஒருங்கிணைத்து, தினமும் வாக்காளர்களைச் சந்தித்து பரப்புரை மேற்கொள்வதும், நம்முடைய சாதனைகளை அவர்களிடம் தொடர்ந்து எடுத்துச் சொல்வதும் உங்களுடைய இரண்டாவது பணி.

வாக்குப்பதிவு நாட்களில் வாக்காளர்களை வாக்குப்பதிவு மையங்களுக்கு வரவைப்பது மூன்றாவது பணி! இந்த மூன்று பணிகளையும் சிறப்பாகச் செயல்படுத்த வாக்காளர் குடும்பத்துடன் நீங்கள் நெருக்கமான நட்பைக் கொண்டிருக்க வேண்டும்.

**குடும்பங்களில் ஒருவராக நீங்கள் மாற வேண்டும்!**

உங்கள் வாக்குச்சாவடியில் 250 குடும்பங்கள் இருக்கின்றன என்று சொன்னால், அந்தக் குடும்பங்களில் ஒருவராக நீங்கள் மாற வேண்டும். அது எப்படி மாற முடியும்? சொல்கிறேன்.

முதலில் உங்கள் வாக்குச் சாவடியில் உள்ள ஒவ்வொரு வாக்காளரைப் பற்றியும் முழுமையாகத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். வாக்காளரின் பெயர், அவரின் வயது, அவருடைய குடும்பத்தினர் யார், என்ன படித்திருக்கிறார், என்ன தொழில் செய்கிறார், எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்பது உள்ளிட்ட முழுவிவரமும் உங்களிடம் இருக்க வேண்டும்.

அடுத்ததாக, அரசின் திட்டங்களையும் முழுமையாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். உங்களிடம் இன்று வழங்கப்பட்டிருக்கும், “திராவிட மாடல் ஆட்சியின் மக்கள் நலத்திட்டங்கள்” என்ற புத்தகத்தை நீங்கள் படித்துப் பார்த்தாலே, அரசின் திட்டங்கள் பற்றி உங்களுக்குத் மிகத் தெளிவாக தெரிந்துவிடும்.

யாருக்கு என்ன தேவையோ அதைக் கண்டறிந்து பெற்றுக் கொடுங்கள். ஒருவருக்கு முதியோர் உதவித் தொகை வழங்குவதில் உதவிகள் தேவைப்படலாம். இன்னொருவருக்கு பட்டா மாறுதலில் உதவி தேவைப்படலாம். இப்படி ஒவ்வொருவரின் தேவையையும் கண்டறிந்து அந்தப் பணிகளை நிறைவேற்றித் தாருங்கள்.

இதனைச் செய்து தர, உங்கள் பகுதியின் ஒன்றிய – நகர பேரூர் – கிளைக் கழகச் செயலாளரையோ, மாவட்டக் கழகச் செயலாளரையோ சட்டமன்ற உறுப்பினரையோ அல்லது அமைச்சர்களையோ அணுகுங்கள். நம்முடைய வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்கள் எடுத்து வரும் கோரிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என மாவட்டக் கழகச் செயலாளர்களிடமும் அமைச்சர்களிடமும், சட்டமன்ற உறுப்பினர்களிடமும் நான் பலமுறை சொன்னாலும், இப்போது திரும்பத் திரும்ப நினைவுப்படுத்தப் போகிறேன்.

**தகுதி வாய்ந்த கோரிக்கைகள் கட்டாயம் நிறைவேற்றப்படும்!**

நீங்கள் கொண்டு வரும் தகுதி வாய்ந்த கோரிக்கைகள் கட்டாயம் நிறைவேற்றித் தரப்படும் என்று நான் உறுதி அளிக்கிறேன். தினமும் ஒரு மணி நேரத்தை வாக்குச்சாவடிப் பணிகளுக்கு என்று ஒதுக்குங்கள். ஒவ்வொரு நாளும் பத்து வீடுகளுக்குச் சென்று பேசுங்கள். ஒரு மாதத்தில் உங்கள் வாக்குச்சாவடியில் உள்ள அத்தனை வீடுகளுக்கும் சென்று வந்துவிடலாம்.

சில வீடுகளில் மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள். சில வீடுகளில் பட்டும்படாமல் வரவேற்பார்கள். சில வீடுகளில் வரவேற்பே இல்லாமல்கூட இருக்கலாம். அதற்காக நாம் விட்டுவிடக் கூடாது. மீண்டும் மீண்டும் அடுத்த மாதம் புன்னகையோடு அவர்களை அணுகுங்கள்.

என்னைப் பொறுத்தவரையில் நம்மை நிராகரிப்பவர்கள் இருக்க மாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன். ஏனென்றால், அனைவருக்கும் பொதுவான ஆட்சியை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். எந்தக் கொம்பனும் குறை சொல்ல முடியாத அளவிற்கு நாம் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம். எங்களுக்குள் குறைகள் இருக்கலாம், எங்களுக்குள் பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால் ஆட்சியில் எந்தக் குறையும் எவனாலும் கண்டுபிடிக்க முடியாது.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒரு விதத்தில் பயனடையும் திட்டங்களாகப் பார்த்துப் பார்த்து நாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இதனால் மக்கள் நம் மீது, நம் ஆட்சியின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

அண்ணன் துரைமுருகன் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னாரே, வருகிற வழியெல்லாம் வரவேற்பு, சால்வை, புத்தகம், கைத்தறி ஆடைகள், பரிசுப் பொருட்கள், இதையெல்லாம் தருகிறபோது இடையிடையில் மனுக்களைத் தருகிறார்களே, ஆட்சிக்கு வந்த தொடக்கத்தில் ஒவ்வொரு இடத்திற்கும் போகிறபோது ஆயிரக் கணக்கில் சேரும். அது குறைந்து குறைந்து இப்போதெல்லாம் அது நூற்றுக் கணக்கில்தான் சேரும் நிலை வந்திருக்கிறது. அதுவே எனக்கு மிகப்பெரிய பெருமை என நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

**மக்களும் மண்ணும் செழிக்க ஏராளமான திட்டங்கள் !**

கோடிக்கணக்கான பெண்களுக்குப் பயனளிக்கும் திட்டம்தான், “மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து” வசதி. ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் கலைஞர் பெயரிலான உரிமைத் தொகையைப் பெற இருக்கிறார்கள். தற்போது 31 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பெற்று வரும் 1000 ரூபாய் முதியோர் உதவித் தொகையை 1200 ரூபாயாக நாம் உயர்த்தி இருக்கிறோம். 18 லட்சம் பள்ளி மாணவ மாணவியர் காலை உணவுத் திட்டத்தால் பயன்பெறப் போகிறார்கள். 13 லட்சம் பெண்களின் நகைக்கடனை ரத்து செய்த அரசு நம்முடைய அரசு. டெல்டா மாவட்டங்களைப் பொறுத்தவரை, மக்களும் மண்ணும் செழிக்கின்ற மாதிரியான ஏராளமான திட்டங்களை உழவர்களுக்கு நாம் செயல்படுத்தி வருகிறோம்.

இப்படி கோடிக்கணக்கானோர் – இலட்சக்கணக்கானோர் பயன்பெறும் திட்டங்களை நிறைவேற்றி, இன்றைக்கு வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கும் அரசுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு. இந்தத் திட்டங்களை எல்லாம் மக்களிடம் எடுத்துச் செல்லும் பரப்புரையாளர்களாக நீங்கள் செயல்பட வேண்டும்.

நமக்கு எதிராக அவதூறுகளையும், பொய்ச் செய்திகளையும் பரப்பிட ஒரு கூட்டம் சுற்றிக் கொண்டிருக்கிறது. பொய்களுக்கு ஆயுள் மிகக் குறைவு. அவர்கள் பொய்களைச் சொல்லிக் கொண்டிருக்கட்டும். நாம் திரும்பத் திரும்ப நம் அரசின் திட்டங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கலாம். நம்முடைய அரசு கொண்டு வந்திருக்கும் நலத்திட்டங்கள் குறித்து வாக்காளர்களிடம் விளக்கிச் சொல்லுங்கள். இதன் மூலமாக எதிரிகள் பரப்பும் அவதூறுகள் எல்லாம் சுக்குநூறாக நொறுங்கிப் போகும்.

இன்றைக்கு பரப்புரை பாணியே மாறிவிட்டது. இன்றைக்கு சமூக ஊடகங்கள்தான் சிறப்பான பரப்புரைக் களங்களாக மாறி இருக்கின்றன. வீட்டில் இருந்துகொண்டே, பக்கத்து அறையில் இருந்துகொண்டே வாட்ஸ்அப்இல் பேசிக் கொண்டிருக்கிறார்கள். காலம் அவ்வாறு மாறி இருக்கிறது. அந்தக்கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் நாம் அனுப்பும் செய்தி வீட்டின் பக்கத்தில் மட்டுமல்ல, ஒரே நிமிடத்தில் உலகம் முழுக்க பரவும் வசதியும் வந்துவிட்டது. இதனை நீங்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே நீங்கள் ஒவ்வொருவரும் சமூக ஊடகங்களில் கணக்குத் தொடங்குவதையும் கட்டாயம் செய்ய வேண்டும். அந்தக் கணக்குகளில் இருந்து அவதூறுகளுக்கு நீங்கள் பதில் சொல்லுங்கள்.

நம் கொள்கைகளைப் பேசுங்கள். நலத்திட்டங்களைப் பதிவிடுங்கள். தேவையில்லாத வம்பு வாக்குவாதங்களில் ஈடுபடாதீர்கள். எதையாவது சொல்லி நம்மைத் திசை திருப்பி விடுவார்கள். இந்தத் திசை திருப்பலுக்கு எல்லாம் பலியாகி விடக் கூடாது.

ஒருபக்கத்தில் நமக்குத் தெரிந்தோ தெரியாமலோ ஆளுநர் நமக்கு ஒரு பெரிய பிரச்சா ரத்தைச் செய்து கொண்டிருக்கிறார். எனவே, அவரை மாற்ற வேண்டும் என்றுகூட நான் சொல்ல விரும்பவில்லை. அவரே இருக்கட்டும். தேர்தல் வரைக்கும் அவர் இருக்கட்டும். இன்னமும் நமக்கு வாக்குகள் அதிகரிக்கும். அதேபோல், தேவையற்ற பிரச்சினைகளைக் கிளப்பி கட்சிக்கு கெட்ட பெயரை வாங்கிக் கொடுக்கவும் கூடாது.

சமூக ஊடகங்களை நல்ல நோக்கத்தோடு - நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**நம் தொண்டர் பலத்துக்கு இணையான வேறு கட்சி இல்லை!**

நாம் இன்னமும் சொல்கிறேன், நம்முடைய தொண்டர் பலத்திற்கும் கட்டமைப்புக்கும் நிகராக தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, இந்த உலகத்தில் வேறு ஒரு கட்சி இருக்கிறதா? எனவே அந்த பலத்தை நாம்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## மணிப்பூர் சம்பவம்: ஒன்றிய அரசை பழனிசாமி கண்டிக்காதது ஏன்?